1989 ஏப்ரல் 27]

தெளிக்கின்ற மருந்து, கொசுவின் இனவிருத்தியைப் பெருக்கு வதற்கான வீரிய மருந்தோ என்று சந்தேகப்படுகின்ற அளவிற்கு நிலைமைகள் சென்று கொண்டு இருக்கின்றன. ஆகவே உண்மையிலேயே இந்தக் கொசுவை ஒழிப்பதற்கு இந்த மருந்தால் ஒரு பயனும் இல்லை என்ற நிலைமை இருப்பதால், வேறு ஏதாவது மாற்றுத் திட்டத்தின் மூலம் கொசுவை அறவே ஒழிப் பதற்கு, கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருந்து இந்த யானை க்கால் நோயை ஒழிப்பதற்கு அரசு ஏதேனும் கருத்துரு வைத்தி திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொசுவை தடுப் பதற்காக, இப்போது சமீபத்தில்கூட ஒரு கருத்தரங்கு நடை பெற்றது. பம்பாய் போன்ற நகரங்களில் பல புதிய முயற்சிகள் எல்லாம் கண்டுபிடித்து இருப்பதாக அந்தக் கருத்தரங்கில் சொல் லப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிக்கின்ற மருந்து மிகவும் திறமையற்ற மருந்தாக இருக்கிறது என்று சொன் னார்கள். அதைப் பற்றி மீண்டும் ஆய்வுக்குக் கூட எடுத்துக் கொவ ளலாம். ஆனால் தமிழகம் முழுவதுமாக அந்த மருந்து தான் தெளிக்கப்பட்டு வருகிறது. தடை செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

குடவாசல் அரசு மருத்துவமனை.

148—(*வினா எண். 554)—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் அரசு மருத்துவ மனையை வட்ட மருத்துவமனையாக மாற்றி தேவையான மருத் துவர்கள் உதவியாளர்கள் நியமனம் செய்ய கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தஞ்சை. மாவட்டம் குடவாசல் அரசு மருத்துவமனை தற்போது வட்ட மருத்துவ மனையாக செயல்பட்டு வருகிறது.

LEGISLATURE TRUTH ALONE TRIUMPHS

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் குடவாசல் மருத்துவ மனையானது சுமார் 55 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு தனி யாராலே கட்டிக் கொடுக்கப்பட்ட ஒரு கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அந்த மருத்துவமனையில் குழந்தைகள் நல பிரிவு அவசர சிகிச்சைப் பிரிவு, எக்ஸ்ரே, ஈ.சி.ஜி. பிரிவுகள், அதி நவீன உபகரணங்களுடன் கூடிய அறுவை சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை ஏற்படுத்தவும், தேவையான பணியாளர்களை நியமனம் செய்யவும் அரசு ஆவன செய்யுமா என்பதை தங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேயுள்ள கட்டிடங்கள் அத்தனையும் பழுது பட்டிருக்கின்ற காரணத்தால், 20 படுக்கைகள் கொண்ட புதிய வார்டுக்கான கட்டிடம் கட்டவும், மருத்துவமனையைச் சுற்றி காம்பவுண்டு சுவர் கட்டவும், மேலும் அங்கேயுள்ள மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டியினுடைய மோட்டார் பழுதுபட்டு பல ஆண்டுகளுக்கு முன்னால் எடுத்துச் செல்லப்பட்டது மீண்டும் பொருத்தப்படாத காரணத்தால், அங்கே குடிதண்ணீர் வசதி இல்லாமல் இருக்கிறது. எனவே உடனடியாக மோட்டார் பொருத்தி, குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கவும், தேவை யான மருத்துவர்களை அங்கே பணியில் அமர்த்தவும் அரசு ஆவன செய்யுமா என்பதை தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, குடவாசலில் 16 படுக்கைகள் கொண்ட ஒரு தாலுக்கா மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. அந்த மருத்துவமனைக்கு வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை, உள் நோயாளிகள் 10 பேரும், வெளி நோயாளிகளாக 225 பேரு மாக இருக்கிறார்கள். வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை யை கணக்கில் கொண்டு, அதனுடைய வளர்ச்சிக்கான திட்டங் கள் வகுக்கப்படுகின்றன. அதே நேரத்தில், அரசினுடைய நிதி நிலையையும் கணக்கில் கொண்டு வேறு பல முன்னேற்றத்திற் கான திட்டங்கள் தீட்டப்படுகின்றன. ஆகவே உறுப்பினருடைய கருத்தோடு, இந்த இரண்டையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு—(ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்).